# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **13 அக்டோபர் 2019** | **பொதுக்காலம் 28 ஆம் ஞாயிறு** | **மூன்றாம் ஆண்டு** |



# உங்கள் சிந்தனைக்கு...

பொதுக்காலம் ஆண்டின் 28ஆம் ஞாயிறுத் திருப்பலிக் கொண்டாடத்தில் கலந்து கொள்ள வந்துள்ள இறைமக்களே உங்கள் அனைவரையும் எல்லாப் பெயர்களுக்கும் மேலான இறைமகன் இயேசுவின் பெயரால் அன்புடன் வாழ்த்துகின்றோம்.

இன்றைய முதல் வாசகத்தில், எலிசாவின் வாக்கிற்கு இணங்கி, தனது வேலைக்காரனின் வேண்டுதலின் பேரில் சிரியா நாட்டு அரசனின் படைத்தலைவனான நாமான் யோர்தான் ஆற்றில் முழ்கித் தன் தொழுநோயிலிருந்து விடுதலைப் பெற்றான். வேற்றினத்தவரான நாமான் யாவே ஒருவரே கடவுள். உண்மையின் கடவுள் என்று நம்பினான். நாமானின் நம்பிக்கை அவரது நோயிலிருந்து அவருக்கு விடுதலையைக் கொடுத்தது.

இன்றைய இரண்டாவது வாசகத்தில், “இயேசுகிறிஸ்து தாவீதின் வழி வித்து எனவும், இறந்த இயேசுகிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார்“ என்பதே தனது நற்செய்தி எனவும் தூய பவுல் அறிவிக்கிறார். தன் வேதனைகளை ஒரு பொருட்டாக எண்ணாமல் இயேசுக் கிறிஸ்துவுக்காக அனைத்தையும் ஏற்றுக்கொள்கிறேன் என்கிறார். இயேசுவோடு நாம் இறந்தால் அவரோடு வாழ்வோம். அவரோடு நிலைத்திருந்தால் அவரோடு ஆட்சி செய்வோம். என்று தன் ஆழமாக நம்பிக்கையை உறுதியாகப் பதிவுசெய்கிறார் பவுலடியார்.

நற்செய்தியில், இயேசுவின் மீது வைத்த விசுவாசம் தொழுநோயுற்ற சமாரியரின் உடலையும், ஆன்மாவையும் காப்பாற்றியது. அவரது குறைகள் குணப்படுத்தப்பட்டது. சமாரியரான அவர் தன்னை யார் குணப்படுத்தினாரோ அவரைப் பாராட்டினார், நன்றி கூறினார். நமக்குள் நம்பிக்கையை விதைத்து நம்மை வழி நடத்தும் இயேசுவைப் போற்றவும், அவருக்கு நன்றி சொல்லவும் நாம் ஒவ்வொருவரும் அழைக்கப் படுகின்றோம். திவ்ய நற்கருணை வழியாக நம்மிடம் வரும் இயேசுவுக்கு நன்றியும், போற்றுதலும் கூறுகிறோமா? சிந்திப்போம். இன்றைய திருப்பலிக் கொண்டாடத்தில் நன்றியோடு இறைவனைப் போற்றிப் புகழ்ந்து, மகிழ்வுடன் பங்கு கொள்வோம்.

## அனைத்து புனிதர்கள் திருவிழா (கடன் திருநாள்)

**திருப்பலி நேரங்கள்**

31-10-2019, வியாழன்: மாலை 6:30 (ஆங்கிலம்)
01-11-2019, வெள்ளி: மதியம் 12:30 மற்றும்
மாலை 6:30 மணி (ஆங்கிலம்),
இரவு 8:00 மணி (தமிழ்)







## அனைத்து ஆன்மாக்கள் தினம் (கல்லறைத் திருநாள்)

**திருப்பலி நேரங்கள்**

02-11-2019, சனி: இரவு 8:30 மணி (தமிழ்)
(திருப்பலிக்கு முன், திருப்பலிக் கருத்துக்கள் எழுதி வாசிக்கப்படும்)

## பொது விடுமுறைத் திருப்பலி நேரம்

**28-10-2098 திங்கள் - தீபாவளி விடுமுறை தினம்**



காலை 9 மணிக்கு ஆங்கிலத் திருப்பலி,
காலை 10 மணிக்குத் தமிழ் திருப்பலி
மதியம் 12மணி முதல் நம் ஆலய வளாகத்தின் இரும்புக் கதவுகள் மூடப்பட்டிருக்கும். அன்று நம் பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு



அன்பார்ந்தவர்களே! பல்வேறு நிதிசேகரிப்பு நடவடிக்கைகள் மூலமாக, நமது ஆலயப் புதுப்பிக்கும் பணிக்காக **இதுவரை S$ 4.3 மில்லியன்** சேர்க்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். மனமுவந்து நன்கொடையளித்த உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்களது நன்றிகள்! நமது ஆலயப் புதுப்பிக்கும் பணிக்குத் தேவையான முழுத் தொகையான **S$ 6.2 மில்லியனை** அடைவதற்கு தொடர்ந்து உங்கள் தாராள மனதையும், செபங்களையும் வேண்டி நிற்கின்றோம்.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்



**சனிக்கிழமைகளில் இரவு** 8:30 மணிக்குத் தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்வியநற்கருணை ஆசீரும் நடைபெறும். நம் அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெறவும், திவ்விய நற்கருணையில் இறைப்பிரசன்னம் காணவும் அனைவரும் வருக!




## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி

**நாள்: 20-10-2019, ஞாயிறு மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும். நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

ST VINCENT DE PAUL HELPS PEOPLE

## புனித வின்சென்ட் தே பவுல் சபைக்கான காணிக்கை

கடந்த ஞாயிறு (06-10-2019) அன்று எடுக்கப்பட்ட இரண்டாம் காணிக்கையில் கிடைத்த மொத்த தொகை S$ 4546.55
பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை S$ 6450.00
தாராளமாகக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்




ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை காலைத் தமிழ் திருப்பலி முடிந்ததும், நமது ஆலயத்தில் தமிழில் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. உங்கள் பிள்ளைகளும் ஞானத்தில் வளர அனுப்பி வையுங்கள்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | 2 அரசர்கள் 6:14-17 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 98: 1. 2-3-4 |
| **பதிலுரை:** ஆண்டவர் தம் மீட்பை மக்களினத்தார் காண வெளிப்படுத்தினார். | |
| **இரண்டாம் வாசகம்:** | 2 திமொத்தேயு 2:8-13 |
| **வாழ்த்தொலி:** அல்லேலூயா, அல்லேலூயா எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள். உங்களுக்காக கிறிஸ்து இயேசு வழியாய்க் கடவுள்வெளிப்படுத்திய திருவுளம் இதுவே. அல்லேலூயா. | |
| **நற்செய்தி வாசகம்:** | லூக்கா 17:11-19 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 &மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 &மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி(ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதிஇரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:**உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

